# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THIRUVIDAIMARUTHUR.

Deposition of Witness for : PW-1 Date : 24.09.2024
Case No. : O.S.339/2019 Nationality : Indian
Name : முருகானந்தவள்ளி Religion :
Father's/Husband's Name : கலைவாணன் Age : 64
Village :
Taluk :

வா.சா.1

சாட்சி சத்திய பிராமாணம் செய்து விசாரிக்கபடுகிறார்.

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி.**

வழக்கில் புல எண் 95/14 இ-ல் கண்ட 14 செண்ட் விஸ்தீரணமுள்ள சொத்திற்கு நான்கெல்லை கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். நான்கெல்லையில் கலியபெருமாள் கூரைவீடு, கொல்லைக்கும் தெற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கலியபெருமாள் யார் என்றால் 1ம் பிரதிவாதி ஆவார். கலியபெருமாள் வீட்டில் எனக்கு உரிமை ஏதுமில்லை என்றால் சரிதான். கலியபெருமாளின் கூரைவீட்டின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. கலியபெருமாளின் கூரை வீட்டிற்கு ஒட்டினாற்போல் கிழக்கே சத்தியமூர்த்தி மாடி வீடு கட்டினாரா என்றால் கட்டினார்.

2. அளவுகளை காட்டிலும் நான்கெல்லைகளைதான் எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதில் எனக்கு ஆட்சேபனை உள்ளதா என்றால் இல்லை. நான்கெல்லைக்கு உள்ளே உள்ள விஸ்தீரணமும் ஆவணத்தில் உள்ள விஸ்தீரணமும் மாறுபட்டால் நான்கெல்லைக்குள்ள விஸ்தீரணத்தைதான் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றால் எனக்கு தெரியாது. வழக்குரையில் நான்கெல்லைக்கு உள்ளே உள்ள சொத்தின்

விஸ்தீரணத்தை சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். 75 குழியாகும். நான் மேற்கண்டவாறு வழக்கில் அளவுகள் சொல்லவில்லை என்றாலும் நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சொத்தின் விஸ்தீரணத்தை பொறுத்து விளம்புகை பரிகாரம் எதுவும் கோரியுள்ளேனா என்றால் இல்லை.

3. புல எண் 95/14 என்ற சொத்து வழக்கிற்கு முன்பே உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். புல எண் 95/14 உட்பிரிவு செய்யப்பட்டு 95/33, 95/14 இ என உட்பிரிவு செய்யப்பட்டு மேற்படி 95/14 இ என்பது 95/ 14 இ 32 மற்றும் 95/14 இ 54 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் 95/14 இ 42 ஆக உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. அதனை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி உட்பிரிவுகள் 1983 ம் ஆண்டிலேயே செய்யப்பட்டுள்ளது. மேற்படி உட்பிரிவு செய்யப்பட்ட விவரத்தை நான் வழக்குரையில் ஏன் சொல்லவில்லை என்றால் இந்த வழக்கு இருந்ததால் சொல்லவில்லை. 1983 ம் ஆண்டு எந்த வழக்கும் இல்லை என்றால் சரிதான்.

4. உட்பிரிவுக்கு முன்னாள் புல எண் 95/14 இ -ன் மொத்த விஸ்தீரணம் 35.5 ஏர்ஸ் என்றால் சரிதான். அரசாங்கத்தால் புல எண்கள் உட்பிரிவு செய்யும்போது வரைபடம் தயார் செய்யப்பட்டு வரிசையாக உட்பிரிவு எண்கள் கொடுக்கப்படும் என்றால் சரிதான். புல எண் 95/14 இ உட்பிரிவு செய்வதற்கு முன்பு எவ்வளவு விஸ்தீரணம் இருந்தது என்பது குறித்து ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. புல எண் 95/15 ல் எனக்கு ஏதும் உரிமை மற்றும் சுவாதீனம் உள்ளதா என்றால் இல்லை. புல எண் 95/33 ல் எனக்கு உரிமை மற்றும் சுவாதீனம் உள்ளதா என்றால் இல்லை. தாவா புல எண் 95/14 இ- 1989 ம் ஆண்டிலேயே புல எண் 95/34 என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்கு ஞாபகமில்லை. புல எண் 95/34 ல் கண்ட சொத்திற்கு எனது கணவர் பெயரில் பட்டா உள்ளதா என்றால் அதில் 4 செண்ட் விஸ்தீரணம் சொத்திற்கு எனது கணவர் பெயரில்

பட்டா உள்ளது. மேற்படி பட்டா வழக்கிற்கு முன்பே ஏற்பட்டது என்றால் சரிதான்.

5. புல எண் 95/34 ல் கண்ட சொத்து எனது கணவர் பெயரில் உள்ளது என்பதை வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். புல எண் 95/14 இ உட்பிரிவு செய்யப்பட்டு புல எண் 95/15 மருத படையாச்சி பெயரில் ஒப்படைவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. மேற்படி விவரத்தை எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். புல எண் 95/14 இ-ல் கண்ட சொத்து ஆரம்பத்தில் புறம்போக்கு நிலமாக இருந்து அந்த சொத்து எனது கணவர் மற்றும் பல நபர்களுக்கு ஒப்படைவு செய்யப்பட்டுள்ளதா என்றால் எனக்கு தெரியாது. கந்தசாமி படையாச்சியிடம் வாங்கினோம். வாங்கி கொடுத்தது 1ம் பிரதிவாதி ஆவார். மேற்படி வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

6. கந்தசாமி படையாச்சிக்கு தாவா சொத்து ஒப்படைவு மூலம் கிடைத்தது என்றால் சரிதான். அந்த ஒப்படைவை பார்த்தால் அதன் மூலமாக கந்தசாமிக்கு எவ்வளவு விஸ்தீரணமுள்ள சொத்து கிடைத்தது என்று தெரிய வரும் என்றால் அது எனக்கு தெரியாது. அரசு புறம்போக்கு நிலத்தில் பல நபர்களுக்கு பட்டா வழங்கப்படும் என்றாலும் நான் தவறான ஆவணங்களை வைத்துக்கொண்டு இவ்வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

x

Taken down by Typed to my dictation
in Open Court read over to the witness
admitted and acknowledged by
him/her to be correct.

SIVAPALANI

Digitally signed by SIVAPALANI
Date: 2024.09.25 10:27:31 +0530

District Munsif cum Judicial Magistrate,
Thiruvidaimarudur.